


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னையில் நேற்று(12.08.2024) போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு உறுதிமொழியினை பள்ளி,கல்லூரி,மாணவ, மாணவியர்கள்அரசு அலுவலர் கள் உட்பட அனைவரும் எடுத்துக் கொண்டனர்.அதனை தொடர்ந்து நெல்லை மாவட்டம் சாப்டர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு உறுதிமொழியினை சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார், தலைமை ச் செயற்குழு உறுப்பினர் சித்திக், மாமன்ற உறுப்பினர் மன்சூர், ஆகியோர் முன்னிலையில் பள்ளி,மாணவ,மாணவியர்கள், அரசு அலுவலர்கள் உட்பட அனைவரும் எடுத்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சுவீடன் நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் 1 முதல் 5 ஆம் வகுப்புகளுக்கான தமிழ்ப் பாடநூல்களை வழங்கினார்.

# மரம் வளர்ப்பதில் மக்கள் ஆர்வம் காட்டிட வேண்டும்!

## சிவகங்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வேண்டுகோள்!



சிவகங்கை. ஆக.13-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை ஊராட்சி ஒன்றியம் இடையமேலூர் ஊராட்சி காந்திநகரில் முதல்வரின் பசுமை காடுகள் திட்டத்தின் கீழ் ஏக்கரில் 6500 மரக்கன்றுகள் நடும் திட்டம் இ.எப்.ஐ. தனியார் தொண்டு நிறுவனமும் மாவட்ட ஊராட்சி திட்ட முக மையம் இணைந்து மரம் நடும் பணியை மேற்கொள்கிறார்கள்.

இதில் முதல் கட்டமாக 2500 மரக்கன்றுகள் நடும் பணி மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் நடைபெற்றது.

முதல்கட்டமாக 2000 மரம் நடும் பணியினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் துவக்கி வைத்து பேசியதாவது:-

மரம் வளர்த்தால் மழை பொழியும் என்ற பழமொழி உண்டு. நாம் அதிகமான அளவில் மரங்களை வளர்க்க வேண்டும். சிவகங்கை மாவட்டத்தை பசுமை நிறைந்த பகுதியாக மாற்ற வேண்டும். இந்திய அளவில்33சதம் காடுகள் உள்ளது. தமிழகத்தில் 23 சதவீதம் காடுகள் தான் உள்ளது.இது10,சதம் குறைவாகும்.

சிவகங்கை மாவட்டத்தில் 8சதவீத காடுகள் தான் உள்ளது .இது மிகவும் ஆபத்தானதாகும் காடுகள் அதிகம் இருந்தால் தான் மழை பொழியும். நாடு வளமாகும் . எனவே காடுகள். அதிரிக்க. வேண்டும் .இதற்கு ஒவ்வொரு குடிமகனும் மரம் வளர்ப்பதில் தனது பங்கினை செலுத்திட வேண்டும். அதிக மரக்கன்றுகளை வளர்த்திட வேண்டும். மரங்களின் தேவைகள் குறித்து ஊராட்சிகள்விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மரம் வளர்ப்பதில் வீட்டிற்கும் நாட்டிற்கும் ஏற்படும் பயன்கள் குறித்து பொது மக்களிடம் விளக்கி கூற வேண்டும். சிவகங்கை மாவட்டத்தில் ருபாய் 5 கோடியில் 90 குளங்கள் தன்னார்வ தொண்டுநிறுவனங்கள் மாவட்டநிர்வாகத்துடன் இணைந்து சீரமைக்கப்பட்டுள்ளது. அது போல் பசுமை வளர்ப்பு திட்டத்தின் கீழ் அதிக அளவில் மரங்கள் வளர்க்கப்பட வேண்டும்.குறுங்காடு கள் ஏற்படுத்திட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் இதயம் உள்ளூர் ஊராட்சி மன்ற தலைவர் சிவதாஸ் இ.எப்.ஐ. தொண்டு நிறுவனம் மேலாளர் ஸ்ரீவத்சன் இந்திய விவேக் எல்லைப் படை டி.எஸ்.பி. சந்திரன் சிவகங்கை ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலசந்தர்ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

சிவகங்கை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் செழியன் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர்கள் கே எஸ் எம் மணிமுத்து ,கே.பி. மந்த காளை,ரவி, திருப்பு வனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் ஒன்றிய கவுன்சிலர் கருப்பணன் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டார்கள் 200 இந்திய திபெத் எல்லைபாது காப்பு படை காவலர்கள், தேசிய ஊரக மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்புதிட்ட பணியாளர்கள் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் இணைந்து மரங்களை நட்டார்கள்.

நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி - ரெட்டியார்பட்டி ஜே.கே.மருத்துவமனை இணைந்து

# முத்தமிழறிஞர் கலைஞரின் 101வது பிறந்த நாள் - இலவச மருத்துவ முகாம்!

## சபி முகமது ஏற்பாட்டில் - டி.பி.எம்.மைதீன்கான் துவக்கி வைத்தார்!

நெல்லை.ஆக.13.

நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி ரெட்டியார் பட்டி ஜே.கே. மருத்துவ மனை இணைந்து கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு மத்திய மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சபி முகமது ஏற்பாட்டில் பொது மருத்துவம்,மகப்பேறு மருத்துவம் ஆகிய மாபெரும் இலவச மருத்துவ முகாம் மேலப் பாளையம் காவல் நிலையம் அருகில் ஆசாத் நடுநிலை பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று முகாமை துவக்கி வைத்தார். இந்த இலவச மருத்துவ முகாம் மூலம் மகப்பேறு தாய்மார்கள் பெரிய அளவில் பயனடைந்தனர்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் ஆலோசனைப்படி எந்த ஒரு நிகழ்வாக இருந்தாலும் அதில் ஏழை, எளிய மக்கள் பயனடைய வேண்டும் என்று அறிவித்திருந்தார்கள்.

அதன்படி நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சபிமுகமது ஏற்பாட்டில் மாபெரும் பொது மருத்துவ முகாம் மேலப்பாளையம் ஆசாத் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்று முகாமை துவக்கி வைத்தார்.முகாமில் மருத்துவர்கள் ஜெயா பொன்ராஜ்,ரியா,ஏ.கே. பவுண்டேஷன் ஜெய்சன் ரெஸ்லி, மருத்துவர் ஜோஸ்வா உள்பட சிறப்பு மருத்துவர்கள் பங்கேற்று மருத்துவ பரிசோதனை செய்தனர்.

இதில் மகப்பேறு தாய்மார்கள் பெரிய அளவில் பயனடைந்தனர்.பொது சிகிச்சையாக சுமார் 300 க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றனர்.

நிகழ்வில் கிறிஸ்தவ உப தேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய தலைவர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்புசாமி கோட்டையப்பன், மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல்,மேலப்பாளையம் மண்டல தலைவர் கதீஜா இக்லாம் பாசிலா, பகுதி துணை செயலாளர் ஆமினா சாதிக், வெங்கடேஷ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆதிதிராவிடர் நலக்குழு நவநீதன்,மகளிர் தொண்டரணி அனிதா, அயிலக அணி துபாய் இஸ்மாயில், பொறியாளர் அணி ரத்னபாலன், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாவட்ட தலைவர் முகமது அலி, மாவட்ட பிரதிநிதி சுரேஷ், வட்டச் செயலாளர்கள் சாலி மௌலானா, முறுக்கு சாகுல், அலி சேக் மன்சூர், அணி துணை அமைப்பாளர்கள் மீரான் மைதீன், ரம்ஜான் அலி, சாகுல், தேவிகா, பவானி,

சாகுல்,சேக் உஸ்மானி, மூப்பன் அப்துல் காதர், ஹமீதா,பெரோஸ்கான்,முத்துசாமி பேரங்காடி ஐயப்பன் தகவல் தொழில் நுட்ப அணி செல்வி.ரெஜினா,விக்டர் தாமஸ்,இளைஞரணி பரமசிவன் உள்பட கழகத்தினர், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வை. பெருமாள்

### ஆகஸ்ட் 13 (2001)



தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை பொதுச்செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர். ஏறத்தாழ 30 ஆண்டுகளாக தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்.

தளபதி அவர்கள் தலைமையில் குடிநீர் பிரச்சினைக்காக நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2001 ஜூன் மாதத்தில் தலைவர் கலைஞர் அவர்களை அ.தி.மு.க. அரசு காவல்துறை காட்டுமிராண்டித்தனமான முறையில் கைது செய்ததைக் கண்டித்து நடைபெற்ற கண்டனப் பேரணியில் தொழிலாளர் அணிக்கு தலைமை தாங்கி முழக்கமிட்டு சென்றபோது மயக்கமுற்றார். அதுவே அவரது கடைசி பயணமானது.

“பொதுவாக அவருடைய வடிவம் ஆஜானுபாகுவான உருவம். புராணீக பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால், தி.மு.கழகத்தினுடைய “பீமசேனன்” வை.பெருமாள் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த உருவமா சாய்ந்துவிட்டது என்று நானும் எண்ணியெண்ணிப் பார்த்தேன். ஏங்கியேங்கித் தவித்தேன்” என தலைவர் கலைஞர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

அருந்ததியினர் பயனடையும் வகையில் தோல் உற்பத்திப் பொருட்களுக்கு

# ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் சலுகைகள் வழங்க வேண்டும்!

## மாநிலங்களவையில் அந்தியூர் பி.செல்வராசு வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக. 13-

“அருந்ததியின மக்கள் பயனடையும் வகையில் தோல் பொருட்களுக்கு ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் சலுகைகள் வழங்க வேண்டும்” என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் அந்தியூர் பி. செல்வராசு வலியுறுத்தினார்.

இதுகுறித்து மாநிலங்களவையில் அந்தியூர் பி. செல்வராசு பேசியதாவது:-

ஒன்றிய அரசின் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்துப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு என் நன்றி. இந்த ஆட்சியின் மீது தொடர்ந்து தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் வைக்கும் குற்றச்சாட்டு, செல்வந்தர்களுக்கு உதவும் வகையிலேயேதிட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதே யன்றி, ஏழை, எளிய மக்களின் நலன் கருதி எந்தத் திட்டமும் அறிவிக்கப்படுவதில்லை என்பதுதான்.

குறிப்பாக நான் சார்ந்திருக்கும் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதி குறிப்பாக, கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய பகுதிகள் தொழில் வளம் மிகுந்த பகுதிகளாகும்.

தென்னகத்தின் மான்செஸ்டர் என்று என்று அழைக்கப்படும் இப்பகுதியில் நூற்பாலைகள் நிறைய உள்ளன. தற்போது இறக்குமதி செய்யப்படும் பருத்தியில் நிலையற்ற விலையின் ஏற்றம் காரணமாக, நூற்புத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அது போலவே கைத்தறி நெசவு பெருமளவில் பாதிப்புக்கு ஆளாகி, நூற்றாண்டு காலமாக இத்தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் மிகுந்த துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர். ஏறத்தாழ 240 பஞ்சாலைகள் மூடப்பட்டு, அந்த மக்கள் வேறு பணிக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது இத்தொழிலின் நுணுக்கங்களை நன்கு அறிந்த மக்களை பல்லாண்டு காலமாக இத்தொழிலில் சிறந்த பயிற்சி பெற்ற மக்களை பெரும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

பாரம்பரியமாக ஒரு தொழிலில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு எந்தவித உதவியும் செய்யாமல் இந்த நிதி நிலை அறிக்கையில் புதிதாக தொழிற் பயிற்சி அளிப்போம் என்று அறிவித்திருப்பது எந்தவித நன்மையும் செய்யாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன்.

### அருந்ததியினர் பாதிப்பு!

அதுபோலவே, தோல் பதனிடும் தொழிலிலும், தோல் பொருட்கள் செய்யும் பணியிலும் காலங்காலமாகப் பயிற்சி பெற்று அத்தொழிலில் ஈடுபட்டு வந்திருந்த அருந்ததியர் சமூக மக்கள் இன்று ஜி. எஸ்.டி., வரி விதிப்பின் காரணமாக தொழில் பெருமளவில் நசிந்து பெருத்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வாறு நூற்றாண்டுகளுக்கு மேல் தேர்ந்த அனுபவப் பயிற்சி பெற்று தொழிலில் ஈடுபட்டு வரும் மக்கள் பெரும்பாலோரின் நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான திட்டங்களை இந்த நிதி நிலை அறிக்கையில் அறிவிக்காதது வருத்தத்திற்குரியதாகும்.

மேலும் எங்கள் பகுதியில் மின்மோட்டார் தயாரிப்புத் தொழில் மிகுந்த பின்னடைவைச் சந்தித்து வருகிறது. காலங்காலமாக மின்மோட்டார் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் பல நிறுவனங்கள் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்த பாதிப்புக்குக் காரணம் பெருந்தொழில் நிறுவனங்களையும் குடிசைத் தொழிலாக வீடுகளிலேயே பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலையும் வேறுபடுத்திப் பார்க்காமல், குடிசைத் தொழிலுக்கும் இதர பெருந்தொழில் நிறு வனங்களுக்கும் ஒரே விதமான ஜி.எஸ்.டி. வரி விதிப்பு குடிசைத் தொழிலில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய சந்தையை உருவாக்காமல் அலட்சியப்படுத்துதல் ஆகியவை தான் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

குறிப்பாக, தமிழகத்தின் மேற்குப் பகுதியில் உள்ள, கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்கள் பெரும்பாலோர், சிறு, குறு தொழில்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

### கல்வித் தொகை கிடைப்பதில்லை!

இந்தப் பகுதி மக்கள், பின்னலாடை, நூல் ஆடைகள், மின் மோட்டார் தயாரிப்பு, கோழி வளர்ப்பு, முட்டை, கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, போர்வை மற்றும் தலையணை தயாரிப்பு, வாகனங்களுக்கு உதிரி பாகங்கள் தயாரிப்பு, லாரி போன்ற வாகனங்களும் உடல் பாகம் கட்டுதல் ஆகிய தொழில்களில் காலங்காலமாக ஈடுபட்டு வருகின்றனர். மேற்படி தொழில்களில் பல லட்சம் மக்கள் ஈடுபட்டு சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

இந்தப் பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு ஒன்றிய அரசு வழங்கி வரும் கல்வி உதவித் தொகை (Scholarship) முழுமையாகக் கிடைப்பதில்லை.

ஒன்றிய அரசு குடிசைத் தொழிலில் ஈடுபட்டும் பல்வேறு பொருள் உற்பத்தி செய்து வரும் மக்களுக்கு என்ன திட்டத்தை வைத்துள்ளது என்று தெரியவில்லை.

நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் குறிப்பிட்ட சதவிகிதத்துக்கு மேல் பங்களிப்பு செய்து வரும் இம்மக்களுக்கு ஒன்றிய அரசு ஜி.எஸ்.டி. வரிவிதிப்பில் சலுகைகள் வழங்க வேண்டும். மேலும், அவர்கள் உற்பத்தி செய்து வரும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு கே.வி.ஐ.சி. போன்ற ஒன்றிய அரசு நிறுவனங்களை பயன்படுத்த வேண்டும்.

சுய தொழிலில் ஈடுபடுவோர் இந்த நாட்டின் மொத்த உற்பத்திக்கு மிகப் பெரிய பங்காற்றி வரும் நிலையில் இவர்களுக்குத் தேவையான கடன் உதவிகளை குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கிடவும் முன்வர வேண்டும்.

இது அனைவருக்குமான நிதிநிலை அறிக்கையாக அமைய வேண்டுமே அன்றி, பணக்காரர்களுக்காக நிதிநிலை அறிக்கையாக இருக்கக்கூடாது என்று உறுதிபடக் கூறுகிறேன்.

இவ்வாறு அந்தியூர் பி.செல்வராசு பேசினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு தினம்:

# தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நினைவாலயம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் துவக்கி வைத்தார்!

தென்காசி.ஆக.13

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் சென்னையில் உள்ளது போல் சுரண்டையில் கலைஞர் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது .

அதனை தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை வகித்து நினைவாலயத்தை துவக்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது.

தமிழகத்தின் அடையாளமாக திகழ்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

சென்னை மெரினா கடற்கரையில் கலைஞர் அவர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவாலயம் போன்று சுரண்டையில் தொண்டர்கள் உழைப்புடன் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் சென்று பார்க்க முடியாத தொண்டர்கள், பொதுமக்கள் இங்கு வந்து பார்க்கலாம்.

மேலும் 30 நாட்கள் மாணவர்கள், பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.தேர்தலில் சிறப்பாக பணியாற்றியவர்கள் கவுரவிக்கப்படுவார்கள் என்று கூறினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகச்சாமி,சேசு ராஜன் பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரன்,ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன்,ரவி சங்கர்,அழகு சுந்தரம் சிவன் பாண்டியன்,மகேஷ் மாயவன், திவான் ஒலி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் சுப்பையா, கரையானூர் சண்முக வேல், நகர செயலாளர் கணேசன்,பேரூர் செயலாளர்கள் முத்து, குற்றாலம் குட்டி, வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார், வீராணம் சேக் முகமது,அப்துல்காதர் கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தமிழ்ச்செல்வி, மகளிர் அணி அமைப்பாளர் திவ்யா மணிகண்டன், சங்கீதா, மாணவர் அணி ரமேஷ், பேரூராட்சி தலைவர் ராஜன், பூல் பாண்டியன், சாமுவேல், மனோகரன், ஆலடிப்பட்டி சுப்பிரமணியன், ஆறுமுகசாமி, சசிகுமார், அன்னபிரகாசம், ராமச்சந்திரன், வேங்கை சந்திரசேகரன், கருப்பணன், அமுனுல்லா, சார்லஸ், முருகன், பிரேக்குமார் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டத்தில் தமிழக வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் பெத்தலக்கம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 182 மாணவியர்களுக்கு ரூ.8.66 இலட்சம் செலவில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி கௌஷிக் உட்பட பலர் உள்ளனர்.